# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No. 75/2021

PW1 – சீதா நாள்– 09.12.2024

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தேவையற்ற வழக்குகளை தாக்கல் செய்து எதிர் தரப்பினரையும் வழக்கு தாக்கல் செய்ய வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் என் தாயாருக்கு கிரையம் கொடுத்த சொத்தை என் அம்மா எனக்கு தானமாக கொடுத்த சொத்து பாகத்தில் வராது என்று கட்சி செய்கிறேன். வழக்கில் என்னுடைய பாகத்திற்கு அதிகமாக சொத்து எனக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இந்த வழக்கில் எனக்கு பாகம் எதுவும் கிடைக்காது என்று சொன்னால் சரியல்ல. கெட்டி மெத்தை வீட்டை 2ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதி வங்கியில் ரூ. 11 லட்சம் கடன் பெற்றும் மற்றும் ரூ.5 லட்சம் தன்னுடைய கையிலிருந்து பணத்தை போட்டு கட்டினார் என்றும், எனவே அதில் எனக்கு பாகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்து சட்டப்படி ஒரேயொரு வீடு இருக்கும் பட்சத்தில்வந்து போய் இருக்கலாம் என்றும் அதில் பாகம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் பாகம் கேட்கும் விவசாய நிலம் 1வது அயிட்ட சொத்தில் நானும், 1ம் வாதியும் பாதி பாகம் கேட்கிறோம். தாவா 1வது அயிட்ட சொத்தில் உள்ள பாதி பாகத்திற்கும் மேலாக எனக்கு சொத்து கொடுக்கப்பட்டுள்ளதால் எனக்கு பாகம் கிடைக்ககூடியவை அல்ல என்றால் சரியல்ல. தாவா 2 சொத்துகளிலும் எனக்கு பாகம் கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.